දුරකථන / தொலைபேசி / Telephones: 011-2136600, 011-2136650

ලේකම් / செயலாளர் / Secretary: 011-2136602

ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2876169, 011-2876181

විද්‍යුත් තැපැල / மின் - அஞ்சல் / E-mail: info@psc.gov.lk

වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.psc.gov.lk


**රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය**

**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**

**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**


අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල

இல. 1200/9, இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை

**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**


මගේ අංකය / எனது இல. / My No.: PSC/EST/05-03/01/2018

මබේ අංකය / உமது இல. / Your No.:

දිනය / திகதி / Date: 2020.07.31

---

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 07/2020

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

<u>முன்னர் வகித்த பதவிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மருத்துவப் பரிசோதனை அறிக்கையை அரசாங்க சேவையில் வேறு பதவியொன்றுக்கு ஏற்புடையதாக்கிக்கொள்ளல்</u>

உத்தியோகத்தரின் உடல் மற்றும் உள சுகாதார நிலை அரசாங்க சேவைக்குப் பொருத்தமென சுகாதாரம் 169 மாதிரிப் படிவத்தை சமர்ப்பித்துள்ள அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகித்த உத்தியோகத்தரொருவர் சேவைத் துண்டிப்பு இன்றி அரசாங்க சேவையிலுள்ள இன்னுமொரு பதவிக்கு தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்பட்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த உத்தியோகத்தர் முன்னைய பதவிக்காக சமர்ப்பித்துள்ள மருத்துவ பரிசோதனை அறிக்கையை புதிய பதவிக்கும் ஏற்புடையதாகக் கொள்வதற்கு நியமன அதிகாரிக்கு அனுமதி வழங்க முடியும்.

02. அவ்வாறான அனுமதியொன்றினை வழங்கும் போது உத்தியோகத்தர் முன்னைய பதவிக்காக சமர்ப்பித்துள்ள பூரணப்படுத்தப்பட்ட சுகாதாரம் 169 மாதிரிப் படிவத்தை உத்தியோகத்தரின் புதிய பதவிக்குரிய பெயர்வழிக் கோப்பில் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03. ஆயினும், புதிய உத்தியோகத்தர் நியமிக்கப்படும் திணைக்களத் தலைவருக்கு இத்தகைய உத்தியோகத்தரொருவரை புதிய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு இதன் மூலம் தடையேதும் கிடையாது.

04. புதிய நியமனமொன்றாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரொருவர் தொடர்பிலும் மேற்படி ஏற்பாடுகளை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு நியமன அதிகாரிக்கு முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு